Registered as a Newspaper பக்கங்கள் 6

விலை ரூபா 6·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி · PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஐப்பசி 15 | 01-11-94 | செவ்வாய்க்கிழமை | ஓசை 256

## தமிழகத்தை தாக்கிய சூறாவளி; 26 பேரைப் பலி கொண்டது

நேற்றுக்காலை தமிழகத்தில் வீசிய சூறாவளியினால் ஒரே குடும்பத்தை சேர்ந்த எழுவர் உட்பட 26பேர் பலியாகினர். நேற்றுக் காலை 8.30 மணியளவில் வீசிய சூறாவளியினால் சென்னையில் ஒரு வீடு இடிந்து விழுந்ததில் அங்கிருந்த ஏழு பேர் பலியானதுடன் மேலும் எட்டுப் பேர் அப்பகுதிகளில் பலியாகினர். சிதம்பரனார் மாவட்டத்தில் மின்னல் தாக்கியதில் மூவரும் திருவண்ணா மலையில் சுவர் இடிந்து விழுந்ததில் மூவர் பலியானதாகவும் தெரிவிக்கப்படுகிறது; மேலும் சென்னை நகரில் [6ஆம் பக்கம் பார்க்க]

### அரசு - புலிகள் சமாதான பேச்சுவார்த்தை

# பாதுகாப்புச் சபை அவசரக் கூட்டத்திலேயே ஒத்திவைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது!

## பிரதமர் - ஹமில்டன் பேச்சில் முடிவு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் - விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையை ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை ஒத்திவைப்பதென காமினி திசாநாயக்கா கொல்லப்பட்டதைத் தொடர்ந்து கூடிய பாதுகாப்புக் கவுன்சிலின் அவசர கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இக் கூட்டத்தில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவிற்கு தமது ஆதரவைத் தெரிவித்ததைத் தொடர்ந்தே கூட்டத்தில் இத் தீர்மானம் நிறைவேறியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து சண்டே லீடரின் பாதுகாப்புச் செய்தியாளர் மேலும் குறிப்பிடுகையில், காமினி திசாநாயக்காவின் மரணத்தைத் தொடர்ந்து சி[illegible] நேரத்தில் அவசரப் பாதுகாப்புக் கவுன்சில் கூடியதாகவும், அதில் பிரதமர் சந்திரிகா குழம்பிய நிலையில் காணப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பிரதமர் சந்திரிகா, காமினி கொலையை தொடர்ந்து சம்பவங்கள் எப்படி உள்ளது என வினாவினார் என்றும், எவரும் இதற்கு பதிலளிக்காது இருந்த போது பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் ஹமில்டன், அம்மையாரே இப்படி பல தடவை நடந்துவிட்டது. இவற்றையெல்லாம் நாம் முகம் கொடுத்தோம். இதையும் எதிர்கொள்வோம் எனக் குறிப்பிட்டார்,

அதற்கு பிரதமர் சந்திரிகா, இந்நிலையில் இராணுவத்தின் நிலைப்பாடு எப்படி உள்ளது எனப் பதிலுக்கு கேட்டார். இதற்கு ஜெனரல் (6ஆம் பக்கம் பார்க்க)

### ஹமில்டனின் பத[illegible]லம் அடுத்த ஆகஸ்ட்வ[illegible]ப்பு

(கொழும்பு)

தற்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகஇருக்கும் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவின் சேவைக்காலம் அடுத்த ஆண்டு ஆகஸ்ட் 16 வரை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது என நம்பகரமாக தெரியவருகிறது.

இதுகு[illegible]டம் செய்தியாளர்[illegible]யபோது தன்னை [illegible] பதவி விலகுமாறு கோரப்படவில்லை எனக் குறிப்பிட்டார். யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சமாதானப் பேச்சுக்களை இராணுவம் இரகசியமாக எதிர்க் ( 6 ஆம் பக்கம் பார்க்க )

## பேச்சு ஆரம்பிப்பது குறித்து இதுவரை எந்த முடிவுமில்லை

(கொழும்பு)

நின்று போயுள்ள சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் எப்போது ஆரம்பிக்கும் என்பது குறித்து இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை என அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி எல் பீரிஸ் பிபிஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்

சமாதான பேச்சுகள் எப்போது மீண்டும் ஆரம்பிக்கும் என்று கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் சமாதான பேச்சுக்கள் மீள ஆரம்பிப்பது காமினி

### அமைச்சர் பீரிஸ்

கொலை குறித்த விசாரணையின் முன்னேற்றத்திலேயே தங்கியுள்ளது விசாரணை முடிவுகள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்

## மதிமதன் கைது

கொழும்பு கிராண்ட்பாஸ் குண்டுவெடிப்பு தொடர்பாக மதிமதன் என்பவர் கொழும்பு பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்தொடர்ந்துவிசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் இதேவேளை இச்சம்பவம் தொடர்பாக 500 பேருக்கு மேல் விசாரிக்கப்பட்டு விட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன

## மேலும் இருவர் மரணம்

(கொழும்பு)

கொழும்பு பாலத்துறையில் நடந்த குண்டுவெடிப்பில், காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருந்த மேலும் இருவர் மரணமாகியுள்ளனர். (6ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி தேர்தல் முடியும் வரை கொழும்பு நகரில் தீவிர பாதுகாப்பு

### மேஜர் ஜெனரல் றொகான்தளுவத்த பொறுப்பு

(கொழும்பு)

குண்டு வெடிப்பில் ஐ.தே.க. வேட்பாளர் காமினி திசாநாயக்கா கொல்லப்பட்டதை அடுத்து கொழும்பு நகரில் ஏற்பாடு செய்யப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் ஜனாதிபதி தேர்தல் முடிவடையும் வரை விலக்கிக் கொள்ளப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு பொறுப்பாக மேஜர் ஜெனரல் றொகான் தளுவத்த நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் ஏனைய பகுதிகளிலிருந்தும், பெருமளவு படையினர் கொழும்புக்குகொண்டு வரப்பட்டுள்ளதாக கொழும்பு தினசரி ஒன்று தெரிவித்துள்ளது (6ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறுமென அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.

# மன்னார் கடலில் 9 மீனவர் கொலை; கடற்படையினரின் வெறியாட்டம்!

(மன்னார்)

மன்னார்அரிப்புத்துறைமுனை கடற்பரப்பில் கடந்த 27-ம் திகதி சிறிலங்கா கடற்படையினரால் ஒன்பது மீனவர்கள் கொல்லப்பட்டனர்.

சம்பவதினம் மாலை 3-30 மணியளவில் அரிப்புத்துறைமுனை கடற்பரப்பிலிருந்து 1½ கடல் மைல் தொலைவில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களே கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டபின் இவர்களது சடலங்கள் தூக்கி கடலில் வீசப்பட்டன.

இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் ஆறு பேர்களது சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளதாகவும் மற்றைய மூவரது சடலங்களும் இதுவரை மீட்கப்படவில்லை என தெரியவருகிறது. கடற்படையினரால் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் அரிப்பு எனும் இடத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கொல்லப்பட்டவர்களது விபரங்கள் வருமாறு; துரையப்பு விஜயரெட்ணம் / நீயோன் (வயது 26), பிரான்சிஸ் பெர்னாண்டோ / ராஜா (வயது 25), ஸ்ரனிஸ்லாஸ் சுகந்தன் பெர்னாண்டோ (வயது 18), அந்தோனி செபஸ்ரியான் பீரிஸ் / யோகம் (வயது 17), அலோசியஸ் பேரிஸ் சனவந்த (6 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா அரசில் தொண்டா இணைவு சுற்றுலா அமைச்சராகவும் பதவிஏற்பு

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எஸ். தொண்டமான் நேற்றைய தினம் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் சேர்ந்து கொண்டார்.

இவர் நேற்றைய தினம் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் சுற்றுலா அமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க முன்னிலையில் ஜனாதிபதி மாளிகையில் இந்த நிகழ்ச்சி இடம்பெற்றது. திரு[illegible]ர்ம சிறிசேனநாயக்க த[illegible]ல், விமான போக்குவரத்து அமைச்சராகவும் திருமதி நிருபமா ராஜபக்ஷ பிரதி சுற்றுலாதுறை அமைச்சராகவும் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்கள்,

இதன் மூலம் தோட்டத் தொழிலாளரின் மூன்று தலைவர்களும் சந்திரிகாவின் கட் (6ஆம் பக்கம் பார்க்க)

### பாடசாலை 3 நாள் [illegible]

[illegible] தேர்தல் நடைபெற இருப்பதை முன்னிட்டு இம்மாதம் எட்டாம், ஒன்பதாம், பத்தாம் திகதிகள் அரசாங்க பாடசாலை விடுமுறை தினங்களாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### குண்டுவெடிப்பில் சந்தேகிக்கப்படும்

## பெண்ணின் முகத்தின் மாதிரி உருவம் அமைப்பு

(கொழும்பு)

பாலத்துறை குண்டுவெடிப்பில் தொடர்புடையவர் எனக் கருதப்படும் பெண் ஒருவரின் முகத்தின் மாதிரி வடிவமொன்று சிறிலங்கா பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் உருவாக்கப்பட்டுள்ளது.

தலையை உதவியாகக் கொண்டு அதன் முகத்தை ஒத்த சந்தேக நபரின் முகத்தை உருவாக்கியுள்ளனர். தற்போது இத்தலையைக் கொண்டு கொலையாளி பற்றிய விபரங்களை திரட்டும் முயற்சியில் சிறிலங்கா பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்-

இதேவேளை துண்டிக்கப்பட்ட தலையை பரிசோதனை செய்வதற்கு பேராசிரியர் என்- வை- விஜேமான முன்வந்துள்ளார்-

இந்த துண்டிக்கப்பட்ட தலை கிராண்ட்பாஸில்குண்டு வெடிப்பு சம்பவம் இடம் பெற்ற இடத்தில் கண்டெடுக்கப்பப்பட்டது-

## ஏழுமணிநேரம் காத்திருந்த தற்கொலைப் படையாளி

(கொழும்பு)

கிராண்ட்பாஸ் குண்டுவெடிப்பிற்கு காரணமான பெண் தற்கொலை படையாளி கூட்டம் நடைபெறுவதற்கு முன்னதாக மாலை 5 மணியளவிலேயே அங்கு வந்து சேர்ந்துவிட்டார் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது-

அவர் அங்கு மேடையிலிருந்து இரண்டாவது வரிசை ஆசனங்களில் மத்தியில் உள்ஆசனம் ஒன்றில் மேடைக்கு நேராக அமர்ந்து கொண்டார் மாலை 5 மணியளவில் கூட்டத்தில் ஐ- தே- க- பாடல் பாடப்பட்டு அங்கு ரணில் விக்கிரமசிங்க வருகை தந்தபோது அப்பெண் அங்கிருந்த ஏனை (6ஆம் பக்கம் பார்க்க)

# காமினியின் கொலை குறித்து ஆராய இந்திய புலனாய்வினர் உதவிபெறுக

### சிறிமா திசாநாயக்கா கோரிக்கை

(கொழும்பு)

காமினி திசாநாயக்கா உட்பட ஐம்பதிற்கும் மேற்பட்டோர் கொலையுண்ட பாலத்துறைக் குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக ஆராய இந்தியப் புலனாய்வுப் பிரிவு பொலிசாரின் உதவியை நாடுமாறு காமினி திசாநாயக்காவின் மனைவியும் ஐ. தே. க. ஜனாதிபதி வேட்பாளருமான திருமதி சிறிமா திசாநாயக்கா பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவுக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவரது கடிதம் கொழும்பில் நேற்று வெளியிடப்பட்டது. அக்கடிதத்தில் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட அதே பாணியில் காமினியின் கொலையும் இடம்பெற்றுள்ளது எனவே இக் குண்டு வெடிப்பு தொடர்பான விசாரணைகளுக்கு இந்தியப் புலனாய்வுப் பிரிவான சி பி ஐ யின் விசேட விசாரணைக் குழுத் தலைவர் டி. ஆர். கார்த்திகேயன் மற்றும் தமிழ் (6 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய புலனாய்வு துறையினரால் புலிகளுக்குள் ஊடுருவ முடியவில்லை

### ஐலண்ட்டில் தராக்கி

தென்னிந்தியாவிலிருந்து இயங்கிய காலப் பகுதியில் மற்றைய தமிழ்க் குழுக்கள் போன்றல்லாது விடுதலைப் புலிகள் அமைப்பு ஒன்று மட்டுமே இந்தியாவின் எந்த புலனாய்வுப் பிரிவும் தனது அமைப்பிற்குள் ஊடுருவ அனுமதியாது செயற்பட்டது என சண்டே ஐலண்டில் அதன் அரசியல் விமர்சகர் தராக்கி குறிப்பிட்டுள்ளார்:

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் ஒருபோதும் தனது அமைப்பின் முக்கிய தளபதிகளை இந்தியாவின் றோ அமைப்பிற்கோ, ஐ.பி. பிரிவிற்கோ, கியூ பிரிவிற்கோ அறிமுகம் செய்து வைக்கவும் இல்லை காட்டவும் இல்லை,

ஆனால் ஏனைய தமிழ்க்குழுக்கள் தம்மிடையே உள்ள வேறுபாட்டினாலும் ஆயுதங்களின் தேவைக்காகவும் றோ அமைப்பின் ஊடுருவலுக்கு வழிவகுத்துக் கொண்டனர், விடுதலைப் புலிகள் இந்திய (6ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## யாழ் நூலகத்தை எரித்த கதையை

'அக்கரைச்சீமையில்' நாவலில் வாசியுங்கள் 250 நாடங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை தனது 45 வருட கால இலக்கிய அனுபவத்துடன் கதை சொல்கிறார் லண்டன் கதை 103 பக்கங்கள் (9928)

## தொல்புரத்தில் நீமியா உரம்

தொல்புரம் சமநலசேவை நிலையத்தில் நீமியா உரம் விற்பனைக்குண்டு: மண் வளமாக்கியாகவும், பயிர் கட்கு நாசம் விளைவிக்கும் பூச்சி விரட்டியாகவும், விளைச்சல் பெருக்கத்தையும் தருவது நீமியா உரம் ''மில்க்வைற்'' (சி-10607)

## மிருதங்கம்

புதிய மிருதங்கம் மற்றும் தபேலா, டோல்கி ஆகியவற்றை சிறந்த முறையில் குறித்த நேரத்தில் செய்து கொள்வதற்கு கோவிந்தபிள்ளை விஜயகுமார் 192/1 நாவலர் வீதி பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணம் (9828)

## விற்பனைக்கு

F 10 வீடியோ கமரா, 180 டெக்,றெமோட்கொன்றோல் சாஜ்ஜர் ஆகியன விற்பனைக்கு நல்ல நிலையில் உண்டு தொடர்பு யூட்போட்டோ 51 நான்காம் குறுக்குத்தெரு சின்னக்கடை. யாழ்ப்பாணம். (சி-10604)

## விற்பனைக்கு

6½ மாதக் கோல்டன் கொமட் முட்டையிடும் கோழியும் சிக்கி,சங்கேரியன் பிறாமாஸ், வாவடிக்கல் பாமாஸ், பன்டம் கோழிகளும் கூடும் விற்பனைக்கு உண்டு தொடர்பு 48 அம்பாள் வீதி நாயன்மார் கட்டு (9927)

## தவறிவிட்டது

30-10-1994 அன்று இளாலி கடற்கரையிலோ அல்லது படகிலோ பெறுமதி வாய்ந்த விஞ்ஞான புத்தகங்களுடனும் வேறு பொருட்களுடனும் ஒரு கறுப்பு றவலிங் பாக் தவறிவிட்டது: அதிலடங்கிய புத்தகங்கள் மிகவும் வேண்டப்படுவதால் தயவு செய்து கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும் (9935)

## திருடியவருக்கு தண்டனை

பணம், சைக்கிள், உடுபிடவைகள் என்பனவற்றை களவாடியவருக்கு குற்றப்பணமும், சிறைத்தண்டனையும் தீர்ப்பளிக்கப்பட்டது.

பளை பகுதியைச் சேர்ந்த இராசையா என்பவரது வீட்டில் இருந்த 1000ரூபா பணமும் 750ரூபா பெறுமதியான உடுபிடவையும் இவரது உறவினரின் புதிய 6965 ரூபா பெறுமதியான சைக்கிளும் களவாடப்பட்டதாக பளைகாவல் பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டது. காவல் துறையினருக்கு கொடுத்தமுறைப்பாட்டின்படி வவுனியா பகுதியைச் சேர்ந்த ஒருவர் இந்த புதிய சைக்கிளை விற்க முயன்றபோது இவரை விசாரணைக்கு உட்படுத்தியபோது களவு அம்பலமானது.

களவாடப்பட்ட பொருள்கள் மீட்கப்பட்டன. இவரை காவல்துறையினர் சாவகச்சேரி நீதி மன்றில் ஆஜர் செய்தனர்.

மேற்படிநபர் குற்றத்தினை ஒப்புக கொண்டதன் பிரகாரம் நீதியாளர் திரு.க. சுடர் ஒருமாத கால சிறைத் தண்டனையும் குற்றப்பணமாக 2500 ரூபாவும் குற்றப்பணம் கட்டத்தவறின் 100 நாட்கள் கட்டாய சமூகசேவை என தீர்ப்பளித்தார். (86)

---

# இதய அஞ்சலி

மக்கள் நலன் காக்கும் பிரிவின் பொருளாளர்

**திரு. வே. பே. செல்லையா**

அவர்கள் அமரத்துவம் எய்தியதையிட்டு

எமது இதய அஞ்சலிகளைசெலுத்தி நிற்கின்றோம்

எமது அமைப்பில் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக ஆரம்பகால உறுப்பினராக இருந்து கடந்த இரு வருடங்களுக்கு மேலாக பொருளாளராக இருந்து தொண்டு மனப்பான்மையுடன் நற்சேவையாற்றி வந்த சமூக சேவையாளனை - சிறந்த பண்பாளனை இன்று இழந்து தவிக்கின்றோம்.

அன்னார் இறைபதம் எய்தியமையை அறிந்து எமது துயர்தோய்ந்த இதய அஞ்சலிகளை தெரிவிக்கின்றோம்.

இருபாலைச் சந்தி கோப்பாய் (9934) மக்கள் நலன் காக்கும் பிரிவு

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 29.05.1977

வீரச்சாவு 12.11.1993

## லெப். குணரத்தினம்
(தங்கராசா ஜெயசிங்கம்)
கதிரிப்பாய் அச்சுவேலி

காலம் கரைந்து விடும் ஆனாலும்
ஞாலம் மீது உன் நினைவு வாழும்
ஆளும் இனமாய் நம்மவர்கள் உயர
நாளும் வழிகாட்டும் கலங்கரை விளக்கமாக.

1-11-94 இன்று எமதில்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில்கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள், உற்றார், உறவினர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தற்காலிக முகவரி:
ஆனந்தா வீதி, மானிப்பாய். - குடும்பத்தினர். (9929)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



## கரும்புலி லெப்டினன்ட் வீரமணி
(தெய்வேந்திரம் - சுதாகர்)

மலராக 1976-09-08 வித்தாக 1993-11-11

திதி: 1994-11-01

கலங்கரை விளக்காக ஒளிர்ந்த - நீ
காலனின் பிடியில் அணைந்தனையோ!
இல்லை...... இல்லை ...
நீ மாவீரர்களுள் ஒருவனாகி வானில்
நட்சத்திரமாய் ஒளிவீசத் தொடங்கிவிட்டாய்,
ஈழமண்ணிலே நீ விதைக்கப்பட்டு
ஓராண்டு அல்ல ஓராயிரம் ஆண்டுகள் - சென்றாலும்
உன் வரலாறு என்றும் அழியாது!
உன் நினைவு எம்மனங்களினின்று நீங்காது...

1993-11-11 அன்று இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட அனைத்துப் போராளிகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

01-11-94 இன்றுஇவரது இல்லத்தில் நடைபெறும் நினைவு நிகழ்வில் சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வட்டு-கிழக்கு வட்டுக்கோட்டை -குடும்பத்தினர். 9910

---

# கராஜில் திருட்டு

மோட்டார் சைக்கிள் திருத்தும் கராஜில் 50ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளது

நேற்று முன்தினம் இரவு கண்டி வீதியில் கச்சேரிக்கு சமீபமாக உள்ள மோட்டார் சைக்கிள் திருத்தும் கராஜில் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உதிரிப்பாகங்கள் களவாடப்பட்டுள்ளது: இக்கராஜின் உரிமையாளரான அருள் என்பவர் இக்களவு தொடர்பாக காவல் துறையினரிடம் புகார் தெரிவித்துள்ளார் [இ. நி]

---

வலி. கிழக்கு தெ.ப.ப.நோ.கூ. சங்கம் நீர்வேலி

# அறிவித்தல்

30-10-94இல் காலமான எமது சங்கத்தலைவர் திரு.வே பே. செல்லையா அவர்களின் இறுதிக்கிரியைகள் 1 11-94 செவ்வாய்க்கிழமை (இன்று) பி.பகல் 2-00 மணிக்கு இருபாலை கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதினால் எமது சங்க வேலைத்தளங்கள் யாவும் இன்று இயங்கமாட்டாது அன்னார் இல்லத்தில் நடைபெறவுள்ள குறித்த நிகழ்வில் கூட்டுறவாளர்கள் கிளைக்குழு உறுப்பினர்கள் அங்கத்தவர்கள் பணியாளர்கள் யாபேரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றேன்-

பொதுமுகாமையாளர்

நீர்வேலி 1994-11-1 சி-10611

---

# அறிவித்தல்

## வட இலங்கை சங்கீத சபைத் தேர்வுகள் - 1995

மேற்படி தேர்வுகளுக்கான விண்ணப்பப்படிவங்களும் அறிவுறுத்தல்களும் 1994-11-01 செவ்வாய்க்கிழமை தொடக்கம் 1995-01-16 திங்கட்கிழமைவரை சபைப் பணிமனையில் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்: படிவம் ஒன்றின் விலை ரூபா 10/-

1995-ம் ஆண்டுத் தேர்வுக்காக சபையால் அச்சிட்டு வழங்கிய படிவத்தில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும் புகைப்படப்பிரதிகளிலும் தட்டச்சிலும் தயாரித்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன் 1995-01-16 க்குப் பின்வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்

1995-ம் ஆண்டுக்கான தேர்வுக் கட்டணங்கள் பின்வருமாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.
தரம்; 01 - ரூபா: 50/- தரம்: 02 - ரூபா 75/-
தரம் 03 ரூபா 100/- தரம் 04 ரூபா 125/-
தரம் 05/- ரூபா 200/ தரம் 06 ரூபா 250/-

மேலும் விபரங்கள் தேவைப்படின் சபைப் பணிமனையுடன் தொடர்புகொள்ளவும்

தி. பெரியதம்பி
கல்விப்பணிப்பாளரும் (யாழ் வலயம் 01)
வ-இலங்கைச் சங்கீதசபைத் தலைவரும்
(சி-10564)

---

# A|L 95

[94 - ல் பரீட்சை எடுத்த மாணவருக்கான]

## மீட்டல் வகுப்பு

ஆரம்பம் 6 - 11 - 1994

சனி - ஞாயிறு வகுப்புக்கள்

| | | |
|---|---|---|
| 12 - 1 | அளவையியல் | - சோதிலிங்கம் |
| | புவியியல் | - சண் |
| 1 - 2 | அரசியல் | - கியூபேட் |
| | இந்து சமயம் | - கிரிதரன் |
| 2 - 3 | பொருளியல் | - மகேந்திரன் |
| 3 - 4 | இந்து நாகரிகம் | - அருள் நங்கை |
| 4 - 5 | தமிழ் | - குழந்தை |

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி/10606)

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி



## கிருஷ்ணபிள்ளை சிவசோதி

தோற்றம்- 12-07-1951 மறைவு 2. 10. 1994

மனைவி, மக்கள், சகோதரர், மச்சான்மார், மச்சாள்மார், மருமக்கள், மாமி, மாமா, உற்றார், உறவினர்.

சங்கானை கிழக்கு, பிரான்பற்று 1- 11- 94. (9931)

---

# உதவிப் பணத்தை உடன் பெறவும்

வேலணைபிரதேச செயலர் பிரிவில் உள்ள மாதாந்த உதவிப் பணம் பெறுவோர்கள் தங்களுக்குரிய மாதாந்த உதவிப் பணத்தை உரிய காலத்தில் பெற்றுக் கொள்ளத் தவறி வருவதினால் இவ்வாறு பெற்றுக் கொள்ளாமல் விடப்படும் பெருந்தொகையான பணங்கள் திரும்பி உரிய இடத்திற்கு திருப்பி அனுப்பப்படுகின்றனவாம் எனவே இடம்பெயர்ந்துள்ள மேற்படி பிரிவைச் சேர்ந்த இப்பணத்தைப் பெற்றுக் கொள்பவர்கள் அனைவரும் உடனடியாக தங்களுக்குரிய உதவிப்பணக் கொடுப்பனவை உரிய காலத்தில் பெற்றுக் கொள்ளுமாறு வேலணைப்பிரிவு அஞ்சல் அதிபர் தெரிவித்துள்ளார்-

---

# நினைவு கூருகின்றோம்...

## 1.11.1994

1985 - ம் ஆண்டு இதே தினத்தில் முழங்காவில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய.

★ **வினோத்** (ஆ. அல்போன்ஸ் ஜெயானந்தம் - நாவாந்துறை - யாழ்)

1990 ம் ஆண்டு மணலாறு - முந்திரிகைக்குளம் சிறிலங்கா இராணுவ மினிமுகாம் தகர்ப்பில் வீரச்சாவெய்திய,

**மேஜர் சங்கர்** (அரியரட்ணம் லவலோகிதன் - தம்பலகமம் - திருமலை)

**முசோலினி** (ஆபிரகாம் தயாளசீலன் 7ம் வட்டாரம் கட்டைபறிச்சான் - திருமலை)

**2 ம் லெப், மதுவன்** (தவராஜசிங்கம் விஜயசேகரன் - மீசாலை தெற்கு - சாவகச்சேரி)

1993-ம் ஆண்டு திருமலை - செல்வநாயகபுரத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடன் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் மூர்த்தி** (வேலாயுதம் சந்திரகுமார் - 144/59, மருத்துவமனை வீதி திருமலை)

**லெப் இன்பன்-யோகேஸ்** (கோபாலப்பிள்ளை ரவீந்திரன் - மெக்கானிக் வீதி - திருமலை)

யாழ் மாவட்டத்தில் தவறுதலாக ஏற்பட்ட விபத்தில் எமைப் பிரிந்த,

**2-ம் லெப். சத்தியசீலன்** (கணேசன் இராசசேகர் - ஏழாலை மத்தி - யாழ்)

இந்நாளில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்கா படையினராலும் முஸ்லிம் காடையர்களாலும் கொல்லப்பட்ட தமிழ், பொது மக்கள்.

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி-10605)

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## லெப். அன்பு (கருணா)
சுப்பிரமணியம் வனிதகுரு

மைந்தனாய் 1976-06-22 மாவீரனாய் 1993-11-11

திதி 94 . 11 . 01

அன்பு!
மறையாத உன் நினைவுகள்
மலர்கின்ற போது
கனவாகிப்போன உன் வதனத்தை
கண்முன்னே நினைவாக்க
தேடுகிறோம் கண்ணீரோடு....

அம்பன், குடத்தனை குடும்பத்தினர்

01-11-94 இன்று சகபோராளிகளையும், உறவினர்களையும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (9938)


---

நோயாளர் நலன்புரிச் சங்கம் அளிக்கும் தீபாவளிக் கதம்பம்

## நிதியுதவி நிகழ்ச்சி

இடம்:- கைலாசபதி கலையரங்கம்
யாழ். பல்கலைக்கழகம்
காலம்:-02- 11 -1994 (நாளை) புதன்கிழமை
நேரம்:- மாலை 5.00 மணி
ஆதரவளித்தவர்கள் அன்புடன்
அழைக்கப்படுகின்றார்கள்
(9939) நன்றி

## ஓராண்டு நினைவஞ்சலி



## 2-ம் லெப். ஈழவேந்தன்

செல்லையா சுந்தரராசன் (அப்பன், சுந்தர்)

பிறப்பு 1971-11-30 வீரச்சாவு 1993-11-11

திதி· 1994-11-01

கோவையில் பூவானாய்
கோமகன் நீயானாய்
சுந்தர் எனப் பெயர் கொண்டாய்
அப்பன் என அழைத்திட்டோம்
ஈழவேந்தன் பெயர் கொண்டே - தமிழ்
ஈழமதன் மீட்சிக்காய்
பூநகரியில் வித்தானாய்
பூமியிலே மறைந்திட்டாய்
என்று நாம் எண்ணவில்லை
எம் நெஞ்சிலே மலர்ந்திட்டாய்
ஓராண்டுத் திதியிலே
ஒன்றாகக் கூடி நிற்கும் - உன்
அன்புக் கினியவர்களின்
ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகள்

இன்று நடைபெறும் (01-11-1994) ஆத்ம சாந்தி கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு சகபோராளிகளையும் உறவினர்களையும் நண்பர்களையும் அழைக்கின்றோம்.

-குடும்பத்தினர்

ஜெயக்குமார் வீதி,
கோப்பாய் வடக்கு. (6163)

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 01. 12. 1972

வீரச்சாவு: 11. 11. 1993

திதி: (திரயோதசி) 1.11.94

### மேஜா பிரகாஸ்

(பரமநாதன் -அருள்நாதன்)

பூநகரி, தவளை நடவடிக்கையின் போது வீரச்சாவடைந்தார்

மேஜர் பிரகாசுடன் வீரச்சாவு அடைந்த வீர மறவர்களுக்கும் எமது வீர அஞ்சலிகள்

இல. 22
2-ம் படிவம்
பாலிநகர், வவுனிக்குளம் (9817)

மேஜர் பிரகாஸ்
குடும்பத்தினர்

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:- 19- 5- 1926

மறைவு 11- 11- 1993



### திருமதி புஸ்பராணி கந்தையா

திதி- 1- 11. 1994

அன்பின் உருவமாய் பாசத்தின் இருப்பிடமாய்
விளங்கிய தெய்வமே!
நீங்கள் எங்களைவிட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று சென்றாலும்
உங்கள் நினைவுடன் என்றென்றும் வாடும்

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

''கௌரிமகால்''
மானிப்பாய் கிழக்கு,
மானிப்பாய். (9915)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப். ஆறுமுகம்

(சோதிநாதன் கஜேந்திரன்)

மாதர் சங்க வீதி, சித்தன்கேணி

மலர்வு 26-05-1974 வீரச்சாவு 11-11-1993

ஆறுமுகம் நீ அளித்து விட்டாய்
நமக்கு ஆறாத்துயரமதை - ஆறுமுகா!
அசைவற்ற உன் அன்பு முகத்தை
அள்ளியெடுத்தேனும் நாம் ஆற்றிடவில்லை நம்
துயரை
பகைவனின் கோட்டைக்குள் பாய்ந்திட்ட - தவளை
வெறும் பாழ்க்கிணற்றுத் தவளையல்ல
என்றும் சுடர் சிந்தும் 'அகல்விளக்கு'

அம்மா, அக்கா, தம்பி,

(9850)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணிலே மலர்வு 02.04 1974

மண்ணிற்காக வித்தாய் 24.10.1992



### லெப் - இறைகுமாரன் (நசார்)

(குமாரசாமி தவராசலிங்கம்)

மிருசுவில் வடக்கு

(திதி -01-11-1994)

அன்பான மைந்தனாய் அருமைச் சகோதரனாய்
உண்மையான நண்பனாய் ஊருக்கு நல்லவனாய்
அன்னை மண் மீட்க அடியெடுத்து வைத்த - நீ
மணலாறு மண்கிண்டியில் மாசாதனை படைத்த
மைந்த
மனதை விட்டகலாதிரண்டாண்டு சென்றாலும்
மனச்சாந்தியுடன் நின் சாந்தி வேண்டுகிறோம்

நின் பிரிவாற்றாமை தாங்காத
பெற்றார், சகோதரிகள், மைத்துனர்
மருமக்கள்

(9840)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 1975. 09. 27

வீரச்சாவு 1993. 11. 11

### லெப். சுகந்திரா

(செல்வராசா அழகானந்தி)

திதி 1994. 11.01

கள்ளம் சிறிதுமில்லா வெள்ளை மனத்துடனே
உள்ளம் திறந்தெவர்க்கும் உள்ளகதை பேசிடுவாய்
மின்னல் எனவீரப்புலியாகி தலைவன்வழிநாடி நின்றாய்
தூயதாம் மண்மீட்பு புனிதப்போரில் துணிச்சலுடன்
உன்வலிமை காட்டி நின்றாய்
பூநகரி மண்தனிலே நீ மறைந்தாலும்
எம் முன்னால் நீ நடமாடிய காட்சி தனை
மறப்போமா தூயநின் வித்துடலைத் தானும்
காணாது துயருறுகின்றோம்.

1 - 11 - 94 இன்று எமதில்லத்தில் நடைபெறும் நினைவு நிகழ்வில் சகபோராளிகள், உற்றார், உறவினர் நண்பர்களை அழைக்கின்றோம்.

அசோக் வீதி,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை. [9842]

உன் பிரிவால் துயருறும்
- குடும்பத்தினர்.

# தீவுப்பகுதி வீடுகளை ஈ.பி.டி.பியினர் தேர்தலின் பின் தீவைத்து எரித்தனர்

(யாழ்ப்பாணம்)

''சுமார் 36 மாதங்களாக வெளி உலகத் தொடர்புகள் ஏதுமின்றி 'கிணற்றுத் தவளை'களாக, தனிமை சூழ்ந்த அவல வாழ்வு வாழ்ந்தோம். சிறிலங்காப் படையினரோ அல்லது ஈ.பி.டி.பியினரோ எம்மிடம் ஏதாவது கேட்பார்கள். எமக்கு காது சரியாக கேளாததனால் திரும்ப திரும்ப நாம்கேட்கவே அலுத்துப் போய் அவர்கள் போய் விடுவார்கள்.

91-ம் ஆண்டு இராணுவம் தரையிறங்கிய ஆரம்பகாலத்தில் வீடுகளை விட்டுமக்களை ஓரிடத்தில் கூடுமாறு பணித்த பின் அனைத்து வீடுகளையும் 'துடைத்து வழித்து' விட்டுள்ளனர். கல்வீடுகள் பெரும்பாலானவை பாழடைந்துபோய் உள்ளன. இருந்த ஓலைக் குடிசைகளோ அண்மையில் சிறிலங்காவில்நடந்த பொதுத் தேர்தலின்பின்னர் ஈ.பி.டி.பியினரால்தீயிட்டுக்கொழுத்தப்பட்டு விட்டன. சாம்பல் மேடுகளே தற்பொழுது குடிசைகள் இருந்த இடங்களில் காணப்படுகின்றன.

ஒரு சிலர் படையினரால் கொல்லப்பட்டும், ஒரு சிலர் காணாமற் போயுமுள்ளனர். எமது பிள்ளைகளின் பெரு முயற்சியினால் நாம் இப்போதாவது யாழ் வந்து சேர முடிந்தது.'' இவ்வாறு இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் தீவகப் பிரதேசத்தில் இருந்து பலதத சிரமங்களின் மத்தியில் அண்மையில் யாழ் வந்து சேர்ந்த நாரந்தனையைச் சேர்ந்த சுவாம் பிலிப் (வயது 84) என்ற வயோதிபர் எமது செய்தியாளரிடம் கூறினார்.

அரியாலை மணியரசன் குடியிருப்பில் தங்கியுள்ள இவ் வயோதிபர் மேலும் கருத்து தெரிவிக்கையில்:- ''வாரத்தில் ஒரு தடவை சேர்ச்சிற்குச் செல்வோம். அங்கு தலையில்லாத, கையில்லாத, காலில்லாத சுருபங்களைத்தான் வழிபடுவோம். சிறிலங்காப் படையினர், ஈ.பி.டி.பியினரின் 'சொறித்'தனமான செயல்களே இதற்குக் காரணம். போகும் போதும் வரும் போதும் மேற்படி சுருபங்களைத் தட்டி ஏதோ ஒன்றை உடைத்துவிட்டுத்தான் போவார்கள்.

இதேபோன்ற செயல்கள் சைவ ஆலயங்களில் உள்ள விக்கிரகங்கள், வாகனங்கள் என்பவற்றிலும் நடந்துள்ளன. காடு போல காட்சியளிக்கும் எமது பகுதியில் ஒரே வீட்டில் என்னுடன் இரண்டு பெண்களும் மற்றொரு வயோதிபரும் தங்கியிருந்தனர். நாங்கள் நால்வரும் வயோதிபர்கள் ஆகையால் பிள்ளைகளின் முயற்சியினால் அங்கிருந்து வெளியேறக் கூடியதாக இருந்தது'' என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (22)

# யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர மக்களிடம் விழிப்புணர்வு அவசியம்

## சமாதான கருத்தரங்கில் உரை

(கண்டி)

யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவரும் நோக்கத்தில் ஜனநாயக ஐக்கிய இலங்கையை கட்டி எழுப்புவது சம்பந்தமாக பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை பல்தேசிய நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

தற்போதைய நெருக்கடி நிலைக்கான காரணம் இனத்துவேசம் கொண்ட சந்தர்ப்பவாதிகளான அரசியல்வாதிகளினால் ஏற்படுத்தப்பட்ட குறுகிய நோக்கங்கள் கொண்ட கொள்கைகளாகும் என்று அவை மேலும் குறிப்பிட்டுள்ளன.

சமாதானத்திற்கான மக்கள் மன்றம் கண்டியில் சமாதானத்திற்கான பாதயாத்திரையையும், கருத்தரங்கையும் ஒழுங்கு செய்துள்ளது. இந்த மன்றத்தில் பல் தேசிய ஸ்தாபனத்தவர்களும், அறிஞர்களும், மதத் தலைவர்களும், நிபுணர்களும் அங்கம் வகிக்கின்றனர்.

கருத்தரங்கில் உரை நிகழ்த்திய இவர்கள் பல இன மக்கள் வாழும் இந்த நாட்டில் சமூகங்கள் மத்தியில் சம அந்தஸ்தை ஏறபடுத்துவதன் மூலமே ஒற்றுமையை உருவாக்க முடியும் என தெரிவித்தனர். சகலரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய கொள்கைகளையும், அரசியல் வழிமுறைகளையும் நடைமுறைப்படுத்துவதன் மூலமே இதனை அடையலாம் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# பரீட்சையை மையமாக்கிய கல்வி முறை மாற வேண்டும்

## வட- கிழக்கு கல்விப்பணிப்பாளர்

இன்றைய கல்வி முறையானது மாணவர்களை மையமாகக் கொள்ளாது பரீட்சைகளை மையமாகக் கொண்டுள்ளது. பாடசாலைகள் பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தும் நிலையங்களாக மாறி இருக்கின்றன. இதனால் கல்விப் போதனை பூரணத்துவம் மிக்கதாக வழங்கப்படுவதில்லை. இவ்வாறு வடக்கு-கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் க. தியாகராஜா தெரிவித்தார்.

மட்டக்களப்பு புனித சிசிலியா மகளிர் மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு பேசிய அவர்மேலும் கூறுகையில், நாட்டினதும், சமூகத்தினதும் அபிவிருத்தியில் கல்விநீண்டகால முதலீடாகும்; சமூகத்தின் எதிர்கால விடிவு கல்வியிலேயே தங்கியுள்ளது. இளம் சந்ததியினரை ஆளுமை மிக்க சமூகச் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய பூரண மனிதர்களாக்குவது கல்வித்துறை சார்ந்தோரின் கடமையாகும்.

மனித விழுமியங்களைக் கொண்டதாகவும் ஆன்மீக தொடர்பு உள்ளதாகவும் கல்வி அமைய வேண்டும்.

அண்மைக்காலமாக இவ்விடயங்களில் இருந்து கல்விப்போதனை விலகிச் செல்லும்நிலை ஏற்பட்டு இருக்கிறது, எமது கல்வி முறை எதிர்கால சந்ததியினரை மனித மேம்பாட்டு விழுமியங்களைத் தழுவியவர்களாக உருவாக்க வேண்டும்.

இலங்கையின் ஜே.வி.பி. கிளர்ச்சி மற்றும் இளைஞர்களின அவநம்பிக்கை மற்றும் தமிழ் இளைஞர்களின் கொதிப்பு என்பனவற்றை ஆராயும் போது கல்வி எந்த அளவுக்கு முழுப் பயனையும் வழங்கியுள்ளது என்பதை அறிய முடியும் எனவும் குறிப்பிட்டார்.

### இறைச்சிப் பரிசோதனை

இறைச்சி நுகர்வோரின் நன்மைகருதி தருமபுரம், ஸ்கந்தபுரம் ஆகிய இடங்களில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் இறைச்சிப்பரிசோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டு இறைச்சிப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன்படி இந் நிலையங்களில் வைத்து மிருகவைத்தியர் மூலம் பரிசோதிக்கப்பட்டு சுகாதாரமான முறையில் வெட்டப்படும் இறைச்சிகளை விற்பனைக்கு விடப்படுவதாகவும் பரிசோதனை செய்யப்படாத இறைச்சி விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் அறியவருகிறது.

இதனால் பொதுமக்கள் இத்திட்டத்தை பெரிதும் வரவேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் மலராக 12.07.1972

தாயக மண்ணில் விதையாக 12.11.1993

### கடற்புலி 2-ம லெப். மதிமலர்

[ஆனந்தவேல் மஞ்சுளா (சுதா)]

திதி:- 1.11.1994

சொந்த மண்ணிலே சுதந்திரமின்றியே
வெந்த மக்களின் வேதனை கண்டுமே
பந்தமறுத்தே படைக்கலமெடுத்தே - மஞ்சுளா-நீ
புலியாக மாறி, மதிமலரானாய்!

அணியாகி அண்ணனின் அடி ஏறினாய்! எம்
அரணாகி அலையேறி நடமாடினாய்,
கனலாகி களமேறி சமராடினாய்! கடல்
புலியாகி கடலன்னை மடி தேடினாய்!

நீலக்கடலிடை நின்ற பகைதேடி
நீளக்கடலெங்கும நிமிர்ந்து திரிந்தாய் இது
ஈழக்கடலென வீறு கொண்டு
நாகதேவன் துறைதனில் நீ பாய்ந்து
அன்னியனை அழித்து சொந்தமண்ணிலே
காவியமானாய்'

இவருடன் வீரச்சாவெய்திய அனைத்து மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

1. 11. 1994 இன்று இவருடைய இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மானாங்கானை,
வல்வெட்டித்துறை.

- குடும்பத்தினர்.
(9810)

## பிரிகேடியர் மரணமானார்

(கொழும்பு)
சிறிலங்கா இராணுவத்தின் 18ம் படையணியின் பிரிகேடியர் கடந்த வெள்ளியன்று கடமையில்இருந்த போது மரணம் அடைந்துள்ளார்.
பிரிகேடியர் பீ.கே.பொடிமாத்தையா என்பவரே கடமையில் இருக்கும் போது மரணமானவர் ஆவார் இவர் புத்தளம் மாவட்டத்திற்கு நியமனம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்
பழைய மாணவர் சங்கம்

**வருடாந்தப் பொதுக்கூட்டம்**

காலம்: 1994- 11- 05 சனிக்கிழமை
பி. ப 3. 00 மணி
இடம்: வித்தியாலய மண்டபம்

பழைய மாணவர்கள் (தற்பொழுது கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்கள் தவிர்ந்த) அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்
பழைய மாணவர் சங்கம்.
(9925)


# மேற்குக்கரை, காஸா பகுதி மீண்டும் போக்குவரவிற்கு திறப்பு

(டெல் அவில்)
மேற்குக்கரை மற்றும் காஸா நிலப்பகுதிகளை மூடி வைத்திருந்த இஸ்ரேல் இதனை இன்று முதல் படிப்படியாக திறந்து விடுதற்கு முடிவு செய்துள்ளது;
இதனை இஸ்ரேலிய பிரதமர் யிட்சாக் ரபீன் டெல் அவிவ் நகரில் அறிவித்தார் அங்கு அவர் மேலும் கூறுகையில் பாலஸ்தீனிய சுய நிர்வாகப் பகுதிக்கு சிவிலியன் அதிகாரங்களை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.
சென்ற 19ம் திகதியன்று டெல் அவிவ் நகரில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தை தொடர்ந்து மேற்குக்கரை மற்றும் காஸா பகுதிகளுக்கான போக்குவரத்து மூடப்பட்டதும். இதனால் இஸ்ரேலில் தொழில்செய்யும் சுமார் 70,000க்கும் அதிகமான பாலஸ்தீனியர்கள் பாதிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.
மேற்குக்கரையில் பாலஸ்தீனிய சுயநிர்வாகப் பகுதியில் சுகாதாரம், சுற்றுலா, மற்றும் வரி விதிப்பு தொடர்பான அதிகாரங்களை பாலஸ்தீனிய அமைப்பிடம் வழங்கத் தயாராக இருப்பதாகவும் ரபீன் மேலும் தெரிவித்தார்.

## பாதுகாப்பு சபை உறுப்பு நாடுகள்

(வாஷிங்டன்)
ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை அங்கத்துவத்துக்கு ஜெர்மனி, இத்தாலி, பொட்ஸ்வானா, ஹொண்டுராஸ், இந்தோனேஷியா ஆகிய நாடுகள் எதிர்வரும் இரண்டாண்டுகளுக்கு தெரிவாகியுள்ளன. பாதுகாப்புச் சபையில் அங்கத்துவம் காலாவதியாகிய ஐந்து உறுப்புநாடுகளுக்கு பதிலாக இந்நாடுகள் தெரிவாகியுள்ளன

## பக்தாத்தில் குண்டுவெடிப்பு

ஈராக்கிய தலைநகர்பக்தாத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவமொன்றில் பொலிசார் உட்பட நால்வர் உயிரிழந்துள்ளனர் கத்தோலிக்கதேவாலயம் ஒன்றிக்காணப்பட்டகுண்டை செயலிழக்கச் செய்யும் முகமாக பொலிசார் வெளியே எடுத்து வந்த போதே குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது;

## தாழமுக்கத்தின் மையம் சென்னையைக் கடந்தது

(சென்னை)
வங்கக் கடலில் மையம் கொண்டிருந்த குறைந்த தாழமுக்கத்தின் மையம் நேற்றுக்காலை ஆறு முப்பது மணியளவில் சென்னையில் கரையைக் கடந்தது. மணிக்கு 120 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று பலமாக வீசியது கடல் அலைகள் வழமையை விட ஒரு மீற்றருக்கும் கூடுதலான உயரத்திற்கு எழுந்தன. சென்னை துறைமுகத்தில், அபாய எச்சரிக்கை எண் பத்தும், கடலூர், நாகபட்டினம் துறைமுகங்களில் அபாய எச்சரிக்கை எண் எட்டும், பாம்பன் இராமேஸ்வரம் துறைமுகங்களில் அபாய எச்சரிக்கை எண் மூன்றும்ஏற்றப்பட்டிருந்தது. கடும் காற்றின் காரணமாக பாரிய மரங்கள் வேரோடு சாய்ந்துள்ளன. தாழ்வான பகுதிகளில் வெள்ளம் தேங்கிப் போயுள்ளது தொலை பேசி இணைப்புக்களும், மின் விநியோகமும் பாதிக்கப்பட்டுள்ளன.

## இஸ்ரேலுக்கான தடையை அரபுநாடுகள் தளர்த்தட்டும்

### அமெரிக்க வெளியுறவு அமைச்சர்


(மொராக்கோ)
அரபு நாடுகள் இஸ்ரேலுக்கு எதிரான 47 வருடகால பொருளாதாரத் தடையை விலக்கிக் கொள்ள வேண்டுமென அமெரிக்க வெளிநாட்டமைச்சர் வாரன் கிறிஸ்தோபர் வேண்டுகோள் விடுத்துள்ளனார்.
மொராக்கோவில் மத்திய கிழக்கு நாடுகளுக்கான பொருளாதார மாநாட்டில் ஆரம்ப உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில் மாறிவரும், நிலைமைகளுக்கு ஏற்ப வர்த்தகத் தொடர்புகளிலும் மாற்றங்கள்கொண்டு வரப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.
இம் மாநாட்டில் நாற்பது நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகளும் எண்பது நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் அதிகமான தொழில் அதிபர்களும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

## ஜோர்தான் - இஸ்ரேல் செய்துள்ள அமைதி உடன்பாடு என்பது பாலத்தீனருக்கு எதிரானது

### ஹமாஸ் இயக்கம் கருத்து

ஜோர்தானும், இஸ்ரேலும் அண்மையில் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் பாலஸ்தீனியர்களுக்கு எதிரானதாகும். இவ்வாறு பாலஸ்தீனிய தீவிரவாத அமைப்புக்களில் ஒன்றான ஹமாஸ் கூறியுள்ளது.
அவ் அமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் மேலும் குறிப்பிடுகையில் ஹமாஸ் இயக்கத்தை அடக்க யாசிர் அரபாத் தலைமையிலான பாலஸ்தீனிய விடுதலை இயக்கம் முற்பட்டால் மத்திய கிழக்குஎங்கும் ரத்தம் சிந்தப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
ஜோர்தானும், இஸ்ரேலும் அண்மையில் அமைதி ஒப்பந்தம் ஒன்றில்கைச்சாத்திட்டது தெரிந்ததே ஜோர்தான் மன்னர் உசைனின் பிரதிநிதியும் இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சரும்கையெழுத்திட்ட இவ் ஒப்பந்தத்தில் ஒரு சாட்சியாக அமெரிக்க அதிபர் பில் கிளிண்டனும் கைச்சாத்திட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஓராண்டு நினைவலையில்



## லெப்டினன்ட் றகீம்/கலைஞன்

(சுபபிரமணியம் சத்தியசீலன்)

தாய் மடியில் 05.02.1970
தாய் மண்ணில் 11.11.1993

பூநகரிப் படைமுடித்து
புலிவீரன் நீ சாய்ந்து
ஆண்டொன்று கழிகிறது - எம்
ஆன்மா துடிக்கிறது!
நீ வீழ்ந்த சேதி வந்தது

நேற்றுப் போலிருக்க
ஆண்டொன்று கழிகிறது!
நினைவுப் பூக்களை எம்
நெஞ்சகத்தில் ஏந்தி வந்து
அஞ்சலிகள் செய்கின்றோம்
அஞ்சலிகள் செய்கின்றோம்!

பூநகரிச் சமரில் இவருடன் களமாடி வீரச்சாவடைந்த மாவீரர்கள் அனைவருக்கும் எமது அஞ்சலிகள்.
1-11-94 அன்று எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் நினைவு நிகழ்விலும் மதியபோசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு போராளிகள், உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னை வேளாங்கன்னி வீதி,
மயிலிட்டி,
தற்போதைய முகவரி,
தபாற்பெட்டி ஒழுங்கை,
இருபாலை.

-குடும்பத்தினர்

(9903)

## ரணிலின் கார் சேதம்

(கொழும்பு)
சிறிகோத்தாவில், ஐதேகவின் ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்யும் செயற்குழுக் கூட்டம் நடந்தபோது அங்கு சென்ற முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் காரும் அடித்து நொருக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# தற்கொலைப் பாதையில் ஐ. தே. கட்சி இப்போது!

- ஏ. ஜே. ரணசிங்க

(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சி இப்போது முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு எதிராக திட்டமிட்டுச் செயற்படுகிறது. இவ்வாறு ஜனாதிபதி தேர்தலில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடும் முன்னாள் அமைச்சர் ஏ ஜே. ரணசிங்க கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில், சிறிய ஆனால் திறமை மிக்க ஒரு குழு ஐ. தே.கவை தற்கொலைப் பாதையில் இட்டுச் செல்கிறது. ஐ தே.கவில் இருக்கும் ஒரேயொருநேர்மை மிக்க தலைவரான முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக சமூகதறுப்புக்களையும், குழிபறிப்புக்களையும் செய்து வருகிறது. அத்துடன் இத்தகைய சக்திகள் அதிகாரத்திற்கு வந்தால் ரணில் விக்கிரமசிங்க போன்றவர்களை ஓரங்கட்டி விடுவார்கள் எனவும் தெரிவித்தார்.
மேலும் கூறுகையில் 35 ஆண்டுகளுக்கு முன் திருமதி சிறிமாபண்டாரநாயக்க அனுதாப அலைகளை வாக்குகளாக்க முற்பட்டபோது அதற்கு ஜே. ஆர்- ஜெயவர்த்தனா எதிர்ப்பு தெரிவித்தார்: அதனால் திருமதி மரிலின் சில்வா திருமதி சிறிமாவை எதிர்த்து வேட்பாளரானார்- ஆனால் அதே வகையிலேயேஇப்போது திருமதி சிறிமா திசாநாயக்க வேட்பாளர் நியமனத்தைப் பெற்றிருக்கிறார் எனவும் சுட்டிக்காட்டினார். ஜே. ஆர். ஜெயவர்த்தனா குடும்ப ஆதிக்கத்தை எதிர்ப்பது என்ற கொள்கையில் உறுதியுடையவராக இருப்பின் அவர் நிச்சயமாக திருமதி சிறிமா திசாநாயக்காவையும் எதிர்க்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

## ரணில் வருத்தம் தெரிவிப்பு

சிறிகோத்தாவில், ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் நடந்தபோது அங்கு செய்திகளை திரட்ட வந்த ரூபவாஹினி குழுவினர் தாக்கப்பட்டமைக்கு, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா வருத்தம் தெரிவித்துள்ளார்.
எனது கட்சியினர் இந்த வேலையைச் செய்யவில்லை. வெளி ஆட்கள் எனது கட்சியின் பெயரை பயன்படுத்தி இந்த வன்செயலை செய்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## காமினியின் இறுதிச்சடங்கில் இனவாத துண்டுப் பிரசுரம்

(கொழும்பு)
ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களையும், பொய்யான தகவல்களையும் உள்ளடக்கிய துண்டுப் பிரசுரங்கள் எதிர்க்கட்சித்தலைவர் காமினி திசாநாயக்காவின் இறுதிச் சடங்குகள் இடம் பெற்றபோது பரவலாக விநியோகம் செய்யப்பட்டுள்ளன இவை இனவாதத்தை தூண்டுபவையாக இருந்துள்ளன என்றும், இத்தகைய பிரசுரங்களில் யார்? எங்கு? அச்சிட்டது என்பன போன்ற விபரங்கள் எதுவும் இருக்கவில்லை எனவும் மேலும் கூறப்படுகிறது.

## அரசியல் வழிகளிலேயே இனப் பிரச்சினைக்கு தீர்வு

- நிஹால் கலப்பதி


(கொழும்பு)
இனப் பிரச்சினையை அரசியல் வழிகளிலேயே தீர்த்து வைக்க முடியும் இராணுவ வழிகளில் அதற்கு தீர்வு காண முடியாது. இவ்வாறு ஜாதிய பிரவா பெரமுன தெரிவித்துள்ளது. இந்த முன்னணியின் தலைவரும், ஜனாதிபதி வேட்பாளர்களில் ஒருவருமான நிஹால் கலப்பதி மகரகமவில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் பேசும் போது இதனை தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் கூறுகையில், தற்சமயம் இடம் பெற்றுவரும் இனப் போரை முதலாளித்துவ வகுப்பினரே உருவாக்கினார்கள். யுத்தம் தீவிரமடைந்து அது இப்போது முதலாளித்துவ வகுப்பாரின் கட்டுப்பாட்டையும் மீறியுள்ளது. சகல சமூகத்தினருக்கும் சம உரிமை அளிப்பதன் மூலமே இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும். முந்திய அரசாங்கம் வட பகுதிக்கான பொருள் விநியோகத்தை தடைசெய்தமை முற்றிலும் தவறானதாகும். நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சிமுறை இனப் பிரச்சினை மேலும் மோசமடைவதற்கு ஒரு காரணம் எனவும் குறிப்பிட்டார்.

## சிறுபான்மையினர் என்பதே இனஐக்கியத்தை குலைத்தது

- லக்ஸ்மன் ஜெயக்கொடி.

(கொழும்பு)
தமிழ் மக்களையும். முஸ்லிம் மக்களையும் சிறுபான்மையினர் எனவும், சிங்களவர்களைப் பெரும்பான்மையினர் எனவும் குறிப்பிட்டு அழைக்கத்தொடங்கியமையே இனங்களுக்கிடையே ஐக்கியம் குன்றுவதற்கு காரணமாக அமைந்தது. இது நாளடைவில் இனவாதத்தை ஏற்படுத்தி நாட்டில் அமைதியின்மைக்கும் வழிவகுத்தது. இவ்வாறு கலாசார மற்றும் சமய விவகாரங்களுக்கான அமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடி தெரிவித்தார்.
திகாரியில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரைநிகழ்த்திய அவர்மேலும் குறிப்பிடுகையில் சிறுபான்மையோர் என்ற வார்த்தையை அடியோடு ஒழித்து இலங்கையில் பிறந்த அனைவரையும் இலங்கை வாசிகள் என்றே அழைக்கும் பழக்கத்தை இனி நாம் உருவாக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்

# 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



மழலையாய்: 08 - 08 - 1968
மாவீரனாய்: 01 - 11 - 1990

## மேஜர் சங்கர்

(அரியரட்ணம் லவலோகிதன்)

தம்பலகமம்

சூரியன் கூசும் வகையினில் விழியிக்
சுடரினைக் கொண்டவனே! - பெரு
வீரியம் சுமந்த நெஞ்சுடனே தினம்
வெங்களம் ஆடியவனே!
''சங்கர்'' எனுந்திரு நாமம் கொண்டு நீ
செய்த சாதனை மறப்போமா? - மனம்
பொங்கும் உணர்வுடன் நித்தமும் உந்தனை
போற்றி நாம் - அஞ்சலிப்போம்.

என்றும் அகலா நினைவுடன்
நண்பர்கள்

(9560)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரச்சாவு 12. 11. 1993

## லெப்ரினன்ட் நீலவண்ணன்

(கந்தையா மகேந்திரன்)

வல்வை மண் ஈன்றெடுத்த வண்ணனே,
விடுதலை கீதம் இசைக்க புறப்பட்ட வேங்கையே
பூநகரிச் சமரில் புது வரலாறு படைத்த வீரனே
நாளை விடியும் தேசம் உன்பெயரையல்லவா
உச்சரிக்கும்.

செல்வம் மில் லேன்,
உடுப்பிட்டி.

-குடும்பத்தினர்.

(9932)

### சிந்தனைக்கு

அறிஞர்கள், தங்கள் அறிவைத் தங்கள் கைத்தடி காரர்கள் போல தாங்கி நிற்பார்கள், அழகுக்கு அல்ல; தங்கள் சொந்தப் பயனுக்கு.

- ஸர் தாமஸ் பிரௌன்.

ஈழநாதம்

31, மஹேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 01- 11- 1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

## புகழில் பங்கானால்......

பிரதமர் சந்திரிகா அண்மைக்கால தனது பேச்சுக்களில் இனப்பிரச்சினை இத்தகைய தூரம் விஸ்வரூபம் எடுத்தமைக்கு கடந்த ஆட்சியினர் விட்ட தவறுகளே காரணம் என்பதை வலியுறுத்துவதில் முனைப்பாகவுள்ளார். நேற்று முன்தினமும் தொலைக்காட்சியில் உரையாற்றிய பிரதமர் 'தமிழர்கள் தமது உரிமையைச் சமாதானமாகக் கேட்ட போது அவர்கள் உடல் ரீதியாகத் தாக்கப்பட்டனர், எரித்துக் கொல்லப்பட்டனர். அவர்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. இது நாட்டைப் பிரிக்கும் போரை அவர்கள் ஆரம்பிக்க வழிவகுத்தது. இதற்கு ஜே ஆர். ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாசா, காமினி திசாநாயக்கா ஆகியோரே குற்றம் சாட்டப்பட வேண்டியவர்கள்' எனச் சாடியிருந்தார்;

கடந்த தசாப்தத்தில் இனப்பிரச்சினை பெரிதாக விரிவடைந்து இன்றைய கட்டத்தை அடைந்தமைக்கு பிரதமர் சந்திரிகா கூறியிருப்பது போன்று முன்னாள் ஜனாதிபதிகள் இருவரும் காமினி திசாநாயக்காவும் காரணம் என்பதில் தப்பில்லைதான். ஆனால் அவர்கள் மட்டுமல்ல இவ் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களின் பின்வந்த ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவும், இம் மூன்று ஜனாதிபதிகளின் அமைச்சரவையுமே காரணமாகும்.

இந்த வகையில் பிரதமர் சந்திரிகா ஐக்கிய தேசியக் கட்சியினர் மீதான குற்றச்சாட்டை சற்று விரிவாகவே சுமத்தியிருக்க முடியும். அவ்வாறு அவர் சுமத்தாமைக்கு வேறு சில காரணங்கள் இருக்கக் கூடும். அதாவது தற்பொழுது தமது அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள சிறிமானி அத்துலத் முதலி போன்றவர்களின் மனத்தைப் புண்படுத்த விரும்பாமல் இருந்திருக்கலாம்;

இனப்பிரச்சினை, ஆயுதப் போராட்டமாக இன்றைய வளர்ச்சிக் கட்டத்தை, கடந்த ஐ தே. கவின் ஆட்சியின் போது தான் அடைந்தது என்பது மறக்கமுடியாத வரலாற்று உண்மை தான். ஆனால் இனப்பிரச்சினை என்பது ஆரம்பமாகியதும் தமிழர் தமது உரிமைக்கான சாத்வீகப் போராட்டத்தை ஆரம்பித்ததும் முற்றுமுழுதாக ஐ தே.கவின் கடந்த 17 வருட ஆட்சியின் போது தான என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

இந்தவகையில் இனப்பிரச்சினைக்கு 'இலங்கையில் சுதந்திரத்தின் பின்' ஆட்சியில் இருந்த இரு கட்சிகளுமே பொறுப்பாகும் இதில் சுதந்திரக்கட்சிக்கும் கணிசமான பங்கு உண்டு. இந்தவகையில் சுதந்திரக் கட்சியின் முதல் நடவடிக்கையாக அமைந்தது தனிச்சிங்கள மசோதாவாகும் இலங்கையில் இது இனமோதல்களை உருவாக்கும் எனத் தெரிந்து கொண்டும் பிரதமர் சந்திரிகாவின் தந்தையரான எஸ். டபிள்யூ பண்டாரநாயக்கா தமது அரசியல் லாபம் ஒன்றை மட்டுமே கருத்திற் கொண்டு மேற்கொண்ட நடவடிக்கை இதுவாகும்.

இதன் பிற்பாடு பிரதமர் சந்திரிகாவின் தாயாரான சிறிமாவோ ஆட்சிக்காலத்தில் தமிழரின் சாத்வீகப் போராட்டத்திற்கு எதிராக பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டதைக் குறிப்பிட முடியும். 1962இல் தமிழர்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்ட போது சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கமே இராணுவத்தை ஏவி சத்தியாக்கிரகத்தை அதாவது சாத்வீகப் போராட்டத்தை பலாத்காரமாக அடக்க முற்பட்டதெனலாம்.

இதன் அடுத்த கட்டமாக 1972இல் சிறிமாவோ பண்டாரநாயக்கா காலத்தில் கொண்டு வந்த அரசியல் யாப்பு சிறுபான்மை இனங்களுக்கு உரிமைகளுக்கு அரசியலமைப்பு ரீதியாக இருந்த பாதுகாப்பை இல்லாது ஒழித்தது. சிறுபான்மை இன மக்கள் சார்பாக வைக்கப்பட்ட ஆறு அம்சக் கோரிக்கை புறக்கணிக்கப்பட்டது. இதற்கு அடுத்த கட்டமாக பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தலை அவ் அரசாங்கம் அமுல்படுத்தியது; இது இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாக உருவெடுத்ததிற்கான நேரடிக் காரணியாக அமைந்தது

இந்தவகையில் 1948-1977 வரையில் ஆட்சியில் இருந்த ஐ தே.கவும், சுதந்திரக்கட்சியும் போட்டி போட்டுக் கொண்டு வளர்த்த இனவாதப் பூதமே எழுபதுகளின் மத்தியில் இனப்பிரச்சினையை ஆயுதப் போராட்ட நிலைக்குக் கொண்டு வந்துவிட்டது. அதன் பின்னர் 17 வருடகாலமாக ஆட்சியில் இருந்த ஐ.தே.கவே இலங்கை இரு இராணுவங்கள் கொண்ட நாடு எனக் கூறும் அளவிற்கு ஆயுதப் போராட்டத்தை வளர்த்துவிட்டதெனலாம்.

இந்நிலையில் பிரதமர் சந்திரிகா சாத்வீகப்போராட்டங்களை தனியாக ஐ.தே.கவின் நடவடிக்கையினால் ஆயுதப் போராட்டமாக மாறி இன்றைய கட்டத்தை அடைந்தது எனக் கூறுவது அத்துணைப் பொருத்தப்பாடல்ல. 1948ஆம் ஆண்டில் இருந்து இற்றை வரையுள்ள காலப் பகுதியில் சுமார் இருபது வருட காலம் இலங்கையை ஆட்சிபுரிந்த சுதந்திரக்கட்சியின் வரலாற்றை மறைக்க முனைவது தவறாகும்;

பிரதமர் சந்திரிகா சுதந்திரக்கட்சியின் கடந்தகால ஆட்சிகளில் நேரடியாக பெரும் தாக்கம் விளைவிப்பவராக இல்லாது இருந்திருக்கலாம். அன்றைய ஆட்சிக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை என அவர் சாதிக்க முற்படின் அது ஓரளவேனும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் இருக்கலாம். ஆனால் பிரதமர் சந்திரிகா தகப்பனார் எஸ்.டபிள்யூ பண்டாரநாயக்கா, தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோரது பெருமையிலும், வாரிசு உரிமையிலும் பங்கு கோரும் போது அவர்களின் ஏனைய நடவடிக்கைகளினால் விளைந்த பாதிப்புக்களுக்கும் பொறுப்பேற்றே ஆக வேண்டும்.

காமினியின் மரணச் சடங்குகள்

# ரூபவாஹினியில் ஒளிபரப்புவது சட்டத்திற்கு புறம்பாகலாம்

### -நீதி அமைச்சர் ஜி. எல் பீரிஸ்

(கொழும்பு)

சட்டத்தின் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான காமினி திசாநாயக்காவின் மரணச் சடங்குகளை அரச தொலைக்காட்சியான ரூபவாஹினியில் ஒளிபரப்புவது நியாயமற்றதாகலாம். இவ்வாறு நீதி அமைச்சரான பேராசிரியர் ஜி எல் பீரிஸ் கூறியுள்ளார்.

செய்தியாளர் மாநாடு ஒன்றில் பேசிய அவர் காமினி திசாநாயக்காவின் மரணச் சடங்கு ரூபவாஹினியில் ஒளிபரப்பப்படாதது ஏன் என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில் காமினியின் மனைவி சிறிமா திசாநாயக்கா இப்போது ஐ தே கவின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகியுள்ளார். இம் மரணச் சடங்கில் அவர் உரையாற்றுவதை ரூபவாஹினி ஒளிபரப்பு செய்தால் அது தேர்தல் சட்டத்தை மீறுவதாக அமையும் என்று ஏனைய வேட்பாளர்கள் சுட்டிக்காட்டக் கூடும் எனவும் குறிப்பிட்டார்.

## ஆனையிறவு, பூநகரியிலும் தேர்தல் வாக்குச்சாவடிகள்

யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் மேலும் 300 வாக்குச் சாவடிகள் அமைக்கப்படுமென தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலின்போது அமைக்கப்பட்டிருந்த 167 வாக்குச்சாவடிகளுடன் இந்த மேலதிகமான 300 வாக்குச் சாவடிகளும் அமைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை உட்பட தீவுப் பகுதிகளில் சென்ற பொதுத் தேர்தலில் அமைக்கப்பட்ட இவ் வாக்குச் சாவடிகள் இம்முறை பூநகரி, ஆனையிறவு, வெற்றிலைக் கேணி ஆகிய இடங்களிலும் அமைக்கப்படவுள்ளதாகவும் சந்திரானந்த டீ சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

## காமினியின் மரணம் கூடியவாக்கு பெற்றுத்தரும்

### - ஐ. தே. க. செயலாளர்நம்பிக்கை

(கொழும்பு)

காமினியின் மரணம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கூடிய வாக்குகளை பெற்றுத் தரும் என ஐ தே.க பிரதிப் பொதுச் செயலாளர் தஹாம் விமலசேன தெரிவித்துள்ளார்,

கிராமப்புறங்களில் காமினி திசாநாயக்காவுக்கு உள்ள அமோக ஆதரவின் மூலம் திருமதி சிறிமா திசநாயக்கா வெற்றி பெறுவது நிச்சயம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சிறிமாவுக்கு ரெலோ ஆதரவு

ஜனாதிபதிதேர்தலில் ஐதேக ஜனாதிபதி வேட்பாளரான சிறிமா திசாநாயக்காவுக்கு ரெலோ ஆதரவளிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பொதுச்செயலாளர் கே. சிவாஜிலிங்கம் இவ் அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

## சிறிமாவை ஆதரிக்க சஜீத், ஹேமா பின்னடிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில், காமினி திசாநாயக்காவை ஆதரித்த போதிலும் அவரின் அகால மறைவின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் அவரின் மனைவி சிறிமா திசாநாயக்காவை ஆதரிப்பதா இல்லையா என்பது குறித்து தானும் தனது தாயாரும் இன்னமும் தீர்மானிக்கவில்லையென்றும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மகன் சஜித் பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

காலஞ்சென்ற தந்தையின் கொள்கைகளை முன்னெடுப்பதாக உறுதியளித்ததால் தான் காமினியை நானும் தாயாரும் ஆதரித்து பிரசாரம் செய்தோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்;

## அணைக்கட்டு பாதுகாப்பு

வடமராட்சி கிழக்கு அம்பன் குடத்தனைப் பகுதியிலுள்ள வெள்ள வாய்க்கால் அணைக்கட்டுப் பாதுகாப்பு வேலைகள் தேச நிர்மாணிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளது;

கிராமத்தினுள் வெள்ளம் வராமல் தடுத்து இக்கிராம மக்களை வெள்ள ஆபத்திலிருந்து பாதுகாக்கும் முகமாக பிரமாண அடிப்படையிலான ஒதுக்கீட்டு நிதியிலிருந்து இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# ஐ.தே.க. அமைச்சர்கள் ஆடம்பரகார் நவம்பர் 5இல் ஏலத்தில் விடப்படும்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்கள் பாவித்த பல ஆடம்பரக் கார்கள் ஏலத்தில் விற்கப்படவுள்ளன. நான்கு கோடி இருபது இலட்சம் ரூபா பெறுமதியான 28 கார்கள் எதிர்வரும் நவம்பர் 5-ம் திகதி ஏலத்திற்கு கொண்டு வரப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

முன்னாள் ஐ தே.க அமைச்சர்கள் பலரும் தேவைக்கும் அதிகமாக ஆடம்பரக் கார்களை இறக்குமதி செய்தனர் என பொதுஜன ஐக்கிய முன்னணி தொடர்ந்தும் குற்றஞ் சாட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

# சந்தேகிக்கப்படும் பெண் தலையுடன் பொலிஸ் குழு லண்டன் பயணம்

(கொழும்பு)

ஐ தே.க ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போது, குண்டை வெடிக்க வைத்தார் என சந்தேகிக்கப்படும் பெண்ணின் தலை மற்றும் சிதைந்த அவயவங்களுடன், இலங்கை இரகசியப் பொலிஸ் குழுவினரும் ஒரு வைத்திய நிபுணரும் ஸ்கொட்லண்ட்யார்ட் பயணமாகியுள்ளதாக பொலிஸ் மாஅதிபர் பிராங் டீ சில்வா தெரிவித்துள்ளார்.

மேலதிக பகுப்பாய்வுகளுக்காக ஸ்கொட்லண்ட்யார்ட் கொண்டு செல்லப்பட்டிருக்கும் தலையை பரிசோதனைக்கு உட்படுத்தவிருக்கும் பிரிட்டிஷ் நிபுணர்கள், சந்தேகத்துக்குரிய பெண், குண்டு வெடிப்புக்கு சற்று முன்னதாக சைனைட் குப்பியைக் கடித்திருக்கிறாரா என்பதை ஆராய்வர் என்றும் பொலிஸ் மாஅதிபர் தெரிவித்துள்ளார்

இதேவேளை குண்டுவெடிப்பு நடந்த இடத்தில் காணப்பட்ட இடதுகால் பிரஸ்தாப பெண்ணுடையதா என்பது குறித்து இரகசியப் பொலிசார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளார்கள். இது குறித்து வைத்திய நிபுணர்களின் உதவியும் நாடப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஊன்றுகோலுடன் நின்ற நபர் குறித்து பிரஸ்தாபம்

(கொழும்பு)

காமினி திசாநாயக்கா கொல்லப்படக் காரணமான குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு முன், மேடைக்கு அருகே ஊன்றுகோல் தாங்கிய நபர் ஒருவர் வரமுயன்றதாக சாட்சிகள் தெரிவித்துள்ளன.

இந்நபர் மேடைக்கு அருகே வரமுயன்ற போது காமினி திசாநாயக்கா அவரை அவதானித்து திரும்பிச் சென்று அவரை ஆசனத்தில் அமர்ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# காமினியின் பிரசாரக் கூட்டங்களுக்கு தவறாது சென்ற தம்பதியர் யார்?

மறைந்த காமினி திசாநாயக்காவின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்கு தொடர்ச்சியாக சென்று வந்ததாக கூறப்படும் தம்பதியரைப் பற்றிய தகவல்களைத் திரட்டுவதில் இரகசியப் பொலிசார் ஈடுபட்டுள்ளதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தம்பதியினர் காமினி திசாநாயக்காவின் ஒவ்வொரு தேர்தல் பிரசாரக் கூட்டத்திற்கும் சென்று வந்திருக்கின்றனர் என்பதை கூட்டங்களின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் காட்டுவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்

குண்டு வெடித்த இடத்தில் காணப்பட்ட அனைத்து தடயப் பொருட்களும் மேலதிக அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளரான ஆனந்த மென்டிஸிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் அடுத்த வாரம் இடைக்கால அறிக்கையை சமர்ப்பிப்பார் எனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# வாபஸ் பெறும் வேட்பாளர் வாக்குகளும் கணிக்கப்படும்

### தேர்தல் திணைக்கள அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்ததன் பின் வேட்பாளர்கள் வாபஸ் பெற்றாலும் வாக்குச் சீட்டுக்களில் அவர்களது பெயர்களுக்கு இடப்படும் வாக்குகள் கணக்கிடப்படும், இவ்வாறு வேட்பாளர்கள் போட்டியிலிருந்து விலகிக் கொள்வதை தேர்தல் சட்டம் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளவில்லை என தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி முற்போக்கு முன்னணியின் வேட்பாளர் ஹரோல்ட் கலப்பதி தான் போட்டியிலிருந்து விலகிக் கொண்டதாக அறிவிக்கப்பட்டாலும் அவருக்கு அளிக்கப்படும் வாக்குகள் கணக்கிடப்படும். இதேபோல வாக்குச் சீட்டில் காமினி திசாநாயக்காவின் பெயருக்கு அளிக்கப்படும் வாக்குகள் திருமதி சிறிமா திசாநாயக்கா பெற்றதாக கணிக்கப்படும் என அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்;

## காமினி மரணமான செய்தி டி. பிக்கு உடன்கிட்டவில்லை

(கொழும்பு)

காமினி திசாநாயக்கா குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட செய்தியை ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினர் உடனடியாக ஜனாதிபதி விஜேதுங்காவிற்கு அறிவிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க சம்பவம் குறித்து அறிந்ததும் அதிகாலை 1. 30 மணியளவில் தனது காரில் ஆஸ்பத்திரிக்கு சென்றுள்ளார்,

அப்போது ஒரு கூட்டத்தினர் ரணிலை நோக்கி கோஷமிட்டபோது ரணில் அவர்களை நோக்கி இது கூச்சலிடும் நேரமல்ல எனகூறிவிட்டு சென்று விட்டார்- வைத்தியசாலையில் கூட்டத்தினரை அமைதிப்படுத்தவும் ரணில் உடனடி நடவடிக்கை எடுக்குமாறும் பணித்தார். இதன் பின் ஜனாதிபதியிடம் சென்று ரணில் நிலைமைகளை அவருக்கு விபரித்தார் அதிகாலை 2- 30 மணிக்கே ஜனாதிபதி பிரதமர் சந்திரிகாவுடன் விசேட மாநாடு ஒன்றை நடத்தி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை ஆராய்ந்தார் இதில் பாதுகாப்பு அமைச்சின் செயலர் முப்படைத்தளபதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்-

இம் மாநாட்டை தொடர்ந்து அவசரகாலநிலையை பிரகடனம் செய்வது என முடிவு செய்யப்பட்டதுடன் ஜனாதிபதியின் நாட்டுமக்களுக்கான உரையும் தயாரிக்கப்பட்டது-

### பொலிசார் எச்சரித்திருந்தும்

## குண்டு துளைக்காத கவசம் காமினி அணியவில்லை

(கொழும்பு)

குண்டு வெடிப்பு இடம் பெற்ற அன்றைய தினம் காமினி திசாநாயக்கா குண்டு துளைக்காத கவசம் அணிந்திருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிசார் அவரின் பாதுகாப்பு குறித்து எச்சரித்திருந்தும் அவர் அதன்படி நடக்கவில்லை என்றும் தினமும் தேர்தல் பிரசாரத்திற்கு செல்கிறேன் எப்படி அந்த பாரமான கவசத்தை அணிந்து கொண்டு உலாவமுடியும் என காமினி தனது மெய்ப்பாதுகாவலரிடம் அண்மையில் வினாவியதாகவும் தெரிவிக்கப்படுகிறது

காமினியின் சடலம் பரிசோதிக்கப்பட்டபோது அவரின் உடலில் சைக்கிள் போல்ஸ் போன்ற பல நுண்ணிய துகள்களே அவரின் நெஞ்சில் பாய்ந்திருந்தன. அவையே அவரின் உயிரை குடித்திருந்தன என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன;

இதேவேளை காமினியின் உயிருக்கு அச்சுறுத்தல் அதிகமாக உள்ள நிலையில் கிராண்ட்பாஸில் தெரிவு செய்யப்பட்ட கூட்ட இடம் பாதுகாப்பற்ற ஒரு பகுதியாகும் எனவும் சண்டே ரைம்ஸ் குறிப்பிட்டுள்ளது அதேசமயம் அன்று அமைக்கப்பட்ட வட்ட மேடை திட்டமிடப்பட்ட இடத்திலிருந்து அப்பால் அமைந்திருந்ததாவும் தெரிவிக்கப்படுகிறது

## 200 சிற்றூழியர்களுக்கு நிரந்தர நியமனம் தாமதம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடா நாட்டில் 200 ற்கும் மேற்பட்ட கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த சிற்றூழியர்கள் கடந்த பத்து வருடங்களாக நிரந்தரமாக்கப்படாமல் உள்ளனர் இதனால் சம்பந்தப்பட்ட ஊழியர் கவலையடைந்துள்ளனர்.

யாழ். கல்வித்திணைக்களத்தின் கீழ் உள்ள கல்வி வலயங்களில் 200ற்கும் மேற்பட்ட சிற்றூழியர்கள் கடந்த பத்து வருடங்களாக தற்காலிக பணியாளர்களாக பணியாற்றிவருவதாகவும் இதனால் நிரந்தர பணியாளரிற்குக் கிடைக்கும் மேலதிக படிகளையும் சலுகைகளையும் தாம் அனுபவிக்க முடியாமல் இருப்பதாகவும் சம்பந்தப்பட்டவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இவர்களை நிரந்தரமாக்குவது தொடர்பாக அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தவட-கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளரான சடாச்சரசன் முதலிடம் எமது செய்தியாளர் கேட்டபோது இவர்களை நிரந்தரமாக்குவதற்கான நடவடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதாகவும் இவர்கள் விரைவில் நிரந்தரமாக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (இ. பா

## எறிகணை வீச்சு

(தொல்புரம்)

காரைநகர் இராணுவக் கடற்படை கூட்டு முகாமிலுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் பொன்னாலை மூளாய் பகுதிகளை நோக்கி நேற்று முன்தினம் இரவு 9-40 மணியளவில் எறிகணை வீச்சினை மேற்கொண்டனர் இவ் எறிகணைகள் மேற்படி பகுதிகளில் வயற் பரப்பில் வீழ்ந்து வெடித்தன- (41)


## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994- 11- 01 செவ்வாய் இரவு

08.01- ஊர்சுற்றும் ஒலி வாங்கி
08,10- அறிந்து கொள்ளுங்கள் - தகவற்களஞ்சியம்
08 20- நலந்தானா - மாரிகாலத்தில் ஏற்படும் விபத்துக்களும் அவற்றை தவிர்ப்பதற்கான ஆலோசனைகளையும் வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் வழங்குவார்
08.30- செய்திகள்
08 40 கருத்துக்களம் இ. இராஜேஸ்வரன் எழுதிய 'கவலையீனம்'
08.50- களமும் கானமும் அச்சுநகர் பானுஷாந்தன் எழுதிய 'எங்களின் கடல்'

### 1994- 11- 02 புதன் காலை

07 02- மாவீரவணக்கம்
07 15- நீங்கள் கேட்டவை
07 30- செய்திகள்
07 35- பத்திரிகைச் செய்திகள்
07 40- நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி




காமினி திசாநாயக்கா கொல்லப்பட்ட குண்டுவெடிப்புநடந்தஇடத்தையும் சம்பவத்தின் மாதிரியையும் காணலாம் .

# ஐ.தே.க வேட்பாளராக ரணிலையே ஜே. ஆரும், டி.பி யும் விரும்பினர்

## காமினி ஆதரவாளர் எதிர்ப்பு இறுதியில் வென்றது

(கொழும்பு)
காமினி திசாநாயக்கா கொல்லப்பட்ட பின்னர் ஐ.தே.கவின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார்என்பதில் கட்சியில் இழுபறி நிலை காணப்பட்டதாக சண்டேரைம்ல் பத்திரிகையின் அரசியல் துறை செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

காமினியின் இடத்திற்கு அவரின் பாரியார் வஜிரா சிறிமா திசாநாயக்காவே பொருத்தமானவர் என்றும் அவரையே நியமிக்குமாறும் முன்னாள் அமைச்சர்களான விஜயபால மெண்டிஸ், எம். எச். முகமட், ஜெயவிக்ரம பெரேரா,பெஸ்டஸ்பெரேரா ஆகியோர் வலியுறுத்தினர்- அநுரா பண்டாரநாயக்காவும், சிறிமா திசாநாயக்காவே வெற்றிடத்தை நிரப்ப பொருத்தமானவர் என வலியுறுத்தினார்-

ஆனால் திங்கள் மாலை ஜனாதிபதி விஜேதுங்க முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராககாமினியின்இடத்திற்காக நிற்குமாறு கேட்டுக் கொண்டார்- முன்னாள் ஜனாதிபதி ஜே-ஆர்- ஜெயவர்த்தனாவும் ரணிலை சந்தித்து கட்சியில் காமினி விட்டு சென்ற இடத்தை ரணில் நிரப்ப வேண்டும் என்றும் ஜனாதிபதி வேட்பாளராக நிற்குமாறும் கேட்டுக் கொண்டார் இதனால் ரணில் ஆச்சரியத்திற்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது-

இதேசமயம் ரணிலை சந்தித்த ஐ-தே-க பிரமுகரும் காமினியின் மைத்துனருமான விக்ரம வீரசூரிய ஜனாதிபதி வேட்பாளராக நிற்க விதவையான திருமதி சிறிமா திசாநாயக்காவே பொருத்தமானவர் என்று கூறியதுடன் ரணில் தேர்தலில் நின்றால் வெற்றிபெற முடியாது என்றும் எடுத்துக் கூறினார்- நீங்கள் வேட்பாளராக நின்றால் காமினி ஆதரவாளர்கள் உங்களுக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்றும் விக்கிரம வீரசூரியகுறிப்பிட்டார் இதை ரணில் உடனடியாக ஏற்க மறுத்தார்-

எனினும் அன்றுஇரவு விஜேபால மெண்டிஸ் தலைமையிலான கட்சியின்ஒருபகுதியினர் ஜனாதிபதியை சந்தித்து ரணிலை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கும் ஜனாதிபதி விஜேதுங்காவின் திட்டத்தை மாற்றிக்கொள்ளுமாறு வேண்டிக்கொண்டனர்.

இதனிடையே தன்னை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தும் கட்சியின் முடிவை சிறிமா திசாநாயக்கா ஆரம்பத்தில் ஆட்சேபித்தார் எனினும் பலரின் நெருக்குதலை தொடர்ந்து அவர் தனது குடும்பத்தினருடன் கலந்து பேசி வேட்பாளராக நிற்க இணங்கினார்என்றும்சண்டேரைம்ஸில் அரசியல் செய்தியாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## விசேட கலந்துரையாடல்கள்

வடபிராந்திய போக்குவரத்துச்சபை ஊழியர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு கோண்டாவில் சாலையில் நடைபெறும்.

உடுவில் கோட்டப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர், ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்று பகல் 1-00 மணிக்கு யாழ் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்:

தெல்லிப்பளைக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர், ஊழியர்களுக்கான கலந்துரையாடல்இன்று பகல் 1-00 மணிக்கு யாழ். மகாஜனாக் கல்லூரியில் (மருதனாமடம்) நடைபெறும்.

சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர், ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்றுபகல் 1.00 மணிக்கு யாழ். மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

பிரதேச சபைகள் வலிவடக்கு, வலிதெற்கு, வலிதென்மேற்கு ஆகியவற்றின் ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்று பி.பகல் 2.00 மணிக்கு யாழ். இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்:

மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பளை, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை சங்கானை, மத்திய மருந்தகம் மகப்பேற்று மனை மானிப்பாய், ஆகியவற்றின் ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்று பி.பகல் 2 00) மணிக்கு மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பளையில் (மானிப்பாய்) நடைபெறும்.

வங்கி ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்று பி. பகல் 4 00 மணிக்கு யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

அனைவரும் தவறாதுசமூகமளிக்கும்படி தமிழீழ நிர்வாக சேவையினர் கேட்டுக் கொள்கின்றனர்.

## ரணிலை சமாதானப்படுத்த ஹமீட் 8 தடவைகள் சந்திப்பு

ஐ தே. க தனது ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்வதற்காக கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில்கூடியபோதுமுன்னாள் பிரதமர் ரணில் விக்கிரசிங்காவை சமாதானப்படுத்த முன்னாள் அமைச்சரும் ஐ தே.க சிரேஷ்ட தலைவருமான ஏ சி. எஸ் ஹமீட் எட்டுத் தடவைகள் ரணிலைச் சந்தித்ததாக கொழும்பு தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது:

செயற்குழுக் கூட்டத்தில் பலத்த கூச்சலும் குழப்பமும் நிலவியதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது

### மன்னார்

ராஜ்பெர்னாண்டோ(வயது) 17), வர்ணாத் யூட்டின் பெர்னான்டோ (வயது 26), அந்தோனி பிரான்சிஸ் பீரிஸ் (வயது 33), கூ. டேதாஸ் பேனிதபத பீரிஸ் (வயது 35) யோசப் மேரியர் (வயது 34) இதில் அந்தோனி, கூடேதாஸ், யோசப் ஆகியோரது சடலங்களே இதுவரை மீட்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### ஹமில்டன்

கின்றதா எனக்கேட்டபோது, தானும் இராணுவ அதிகாரிகளும் பிரதமருக்கு பூரண ஆதரவு வழங்குவதாக குறிப்பிட்டார். இராணுவ உயர்பீடத்திற்கும் அரசுக்கும் முறுகல் நிலை ஏதும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்,

### இந்திய

ஏஜென்ட்டுகள் தமது அமைப்பினுள் செல்வாக்கை செலுத்துவதை தடுக்க அனைத்து முன் தடுப்பு நடவடிக்கைகளையும் எடுத்தனர் என்றும் தராக்கி தனது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

### ஜனாதிபதி

ளது.

இப்படையினர் கொழும்பு நகரின் கேந்திரப் பகுதிகளிலும், சுற்றுப் புறங்களிலும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், கொழும்பிற்குள் நுழையும் வாகனங்கள் தீவிர சோதனைக்குட்படுத்தப் படுவதாகவும், இப்பாதுகாப்பு ஏற்பாடுகள் ஜனாதிபதி தேர்தல் வரை நீடிக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு ஏற்பாடுகள் தளர்த்தப்படும் பட்சத்தில் வன்முறைக் கும்பல்கள் தங்கள் கைவரிசையைக் காட்ட முனையலாமெனவும், இதனால் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்ந்தும் தீவிரமாக இருப்பதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி அத்தினசரி மேலும் தெரிவித்துள்ளது,

# அரசியல் தலைவர்களுக்கு புதிய பாதுகாப்புத் திட்டம்

அரசியல் தலைவர்களுக்கான பாதுகாப்பு முறை மாற்றியமைக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கான புதிய வேலைத திட்டம் தயாரிக்கப் பட்டு விட்டதாகவும் அதனை அமுல்படுதத பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் பிரதிப்பாதுகாபபு அமைச்சர் அனுருத்த ரத்வதத தெரிவித்துள்ளார்

'லங்காதீப' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்த அவர் சென்ற காலங்களில் பல்வேறு விதமான வகையில் அரசியல் தலைவர்கள் பலர் கொலை செய்யப்பட்டுள்ளனர் இது தொடராது இருக்க நடவடிக்கை எடுப்பதே தமது நோக்கம் என மேலும் கூறினார்

புதிய பாதுகாப்பு முறை தொடர்பாக பாதுகாப்பிற்குப் பொறுப்பான சிரேஷ்ட அதிகாரிகளுடன் விரிவான முறையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றதாகவும் இதன் பிரகாரம் அரசியல் தலைவர்களுக்கு கிரமமான விரிவான பாதுகாப்பு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்

முன்னைய பாதுகாப்பு நடவடிக்கைகளில் பல குறைபாடுகள் இருந்ததாக தெரிவித்த அவர் பிழைகள் மற்றும் குறைபாடுகள் முற்றாக நீக்கப்படும் என உறுதியளித்தார்

## உதைபந்தாட்ட போட்டிகள்

யாழ் மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள் இன்று பிற்பகல் 2.30 க்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இன்று பிற்பகல் 2.30 மணிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரியை எதிர்த்து புனித ஜேம்ஸ் மகாவித்தியாலயமும் 3.15 மணிக்கு புங்குடுதீவு மகாவித்தியாலயத்தை எதிர்த்து இணுவில் மத்திய கல்லூரியும் 4-00 மணிக்கு ஏழாலை ஸ்ரீமுருகனை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதுகின்றன.

### ஏழுமணிநேரம்

யவர்களுடன்சேர்ந்து தாமும் எழுந்து நின்றார்-

நள்ளிரவுக்குபின்காமினியை இலக்கு வைத்து குண்டுவெடிக்கவைக்கப்பட்டபோது குண்டிலிருந்து பெருமளவிலான சைக்கிள் குண்டுகள் மேடையின் இடப் பக்கமாக ஒரு கோணத்திற்கு வேகமாக பறந்தன இவற்றில் சில காமினியின் தலையிலும் நெஞ்சிலும் தாக்கின மேடையில் எழுந்து நின்றவர்கள் இத்துகள்களினால் தாக்கப்பட்டு இறந்தனர் ஆசனங்களில் இருந்தவர்களில் அனைவரும் காயமடைந்தனர்.

மேடையின் வலப்பக்கமாக பாதுகாப்பிற்காக நின்ற பொலிசார் குண்டில்இருந்து சிறிய துண்டுகளுக்கு இலக்காகவில்லை எனினும் குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட பெரும் காற்றழுக்கத்தினால் கீழே தள்ளப்பட்டனர்.

### தமிழகத்தை

பெரும் அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது அங்கு 2000 மரங்கள் வரை வீழ்ந்துள்ளதாகவும் பலவீடுகள் இடிந்து வீழ்ந்துள்ளதுடன் சென்னை துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த கப்பல் ஒன்று பலத்த காற்றின் காரணமாகத் தரை தட்டியுள்ளது

### காமினியின்

நாடு ஓய்வு பெற்ற தடயப் பிரிவு பொலிஸ் உயரதிகாரி பேராசிரியர் பி. சந்திரசேகரன் ஆகியோரது உதவிகோரப் படவேண்டும் எனவும் சிறிமா திசாநாயக்கா கேட்டுள்ளார்:

இதேவேளை பாலத்துறைக் குண்டு வெடிப்பின் சந்தேகநபரென கருதப்படும் குறிப்பிட்ட பெண், காமினி திசாநாயக்கா பங்குபற்றிய மருதானை பிரசாரக் கூட்டத்திலும் காணப்பட்டதாக வீடியோ நாடா ஒன்றின் மூலமாக தெரிய வந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### சந்திரிகா

சியை ஆதரிக்கின்றனர்

இதேவேளை தொண்டமானிற்கு எதிரானவர்களான சந்திரசேகரன், செல்லச்சாமி போன்றோரை சந்திரிகா எப்படி கையாளப் போகின்றார் அவர்களிற்கு தமது அரசிற்குள் எந்தளவு முக்கியத்துவம் கொடுக்கப்போகிறார் என பொறுத்திருந்து பார்க்கவேண்டுமென அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

### பாதுகாப்புச்

வணசிங்க, இராணுவம் அரசுக்கு அதிகபட்ச ஆதரவாக செயற்படுகின்றது என உறுதியளித்தார்.

இதைத் தொடர்ந்து அக்கூட்டத்தில் வைத்து நடைபெறும் அரசு-புலிகள் சமாதானப் பேச்சுகளை தேர்தல் முடிவடையும் வரை ஒத்திவைப்பது என முடிவு செய்யப்பட்டது என அச்செய்தியாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்,

### மேலும் இருவர்

இவர்களின் மரணத்துடன் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டோர் தொகை 63 ஆக உயர்ந்துள்ளது.

வலி. கிழக்கு, தெ.ப.ப.நோ. கூ. சங்கம். நீர்வேலி

கண்ணீர் அஞ்சலி

உயர்திரு. வேலுப்பிள்ளை பேரம்பலம் செல்லையா



முன்னைநாள் மாவட்ட தபால் அத்தியட்சகரும், வலி. கிழக்கு, தெ.ப ப. நோ. கூ. சங்கத் தலைவரும் ஆன உயர்திரு: வே.பே. செல்லையா அவர்கட்கு எமது இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்களுக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை செலுத்துகிறோம்.

இருபாலை பெற்றெடுத்த மைந்தா
பாருக்கே உம்மை அர்ப்பணித்த கடமை வீரா
கலங்குகிறோம் நாங்கள் உமது பிரிவால்
காணிக்கை ஆக்குகிறோம்
கண்ணீர் அஞ்சலியை

பணிப்பாளர், பணியாளர்கள், அங்கத்தவர்கள்
வலி கிழக்கு தெ.ப.ப.நோ.கூ. சங்கம் நீர்வேலி.

நீர்வேலி, 1994-11-01

(சி110612)

மரண அறிவித்தல்



V. P. செல்லையா (P. M)

இருபாலையைச் சேர்ந்த இளைப்பாறிய மாவட்ட தபால் அத்தியட்சகரும் (மொனராகலை), தற்போதைய வலி கிழக்கு தென்பகுதி (நீர்வேலி) ப; நோ: கூ. சங்கத்தின் தலைவரும், இருபாலை மக்கள் நலன் காக்கும் பிரிவின் பொருளாளரும், இருபாலை கண்ணகியம்பாள் மாதர் சங்கம், இருபாலை கண்ணகியம்பாள் ஐக்கிய நாணய சங்கம், இருபாலை கிழக்கு சனசமூக நிலையம் ஆகியவற்றின் போஷகருமான V. P. செல்லையா (P. M) 30-10-94-ல் காலமானார்.

இவர் இருபாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற பேரம்பலம் சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், சந்தானலக்சுமியின் (மகேஸ்) அன்புக் கணவரும், களவெட்டி முன்னாள் யானை மார்க் சுருட்டுக் கம்பனியின் உரிமையாளருமாகிய காலஞ்சென்ற பொன்னையா தம்பதிகளின் அன்பு மருமகனுமாவார்;

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 1- 11- 94 இன்று செவ்வாய் பிற்பகல் 2. 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்: உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்;

தகவல்: மனைவி

இருபாலை கிழக்கு, இருபாலை:

(9940)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் ஊணிமனையில் 1994 -ம் ஆண்டு நவம்பர் மாதம் 01- ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.